# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRIC MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
MADATHUKULAM

| | | |
|---|---|---|
| Calender | : | CC 332/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosectuion (Pw 2 ) |
| | : | |
| Name | : | Saraswathi |
| Father's Name | : | Kannimuthu |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with he provision of act X of 1873

of the 01st day of March 2021

நாள் **CC 332/2019** அ.சா **2**

பெயர் சரஸ்வதி த/பெ. கன்னிமுத்து

(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)

நான் கருப்பட்டி பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . ஆஜர் எதிரி கண்ணனை தெரியும். எதிரிகள் கலைச்செல்வி , கருப்புசாமி, செல்வராஜ் ஆகியோர் என் தோட்டத்து பக்கத்தில் தோட்டம் வாங்கியுள்ளார்கள் அதனால் தெரியும். 11ம் தேதி 12ம் மாதம் 4 வருடத்திற்கு முன்பு எங்களது காட்டில் காலையில் 09 மணி இருக்கும் கலைச்செல்வி , கருப்புசாமி, செல்வராஜ் , கண்ணன் ஆகியோர் எங்களை தடத்தில் நடக்க வேண்டாம் என்று பிரச்சனை செய்தார்கள் . நாங்கள் போய்விட்டோம். மதியம் 03 மணி அளவில் கலைச்செல்வி , கருப்புசாமி, செல்வராஜ் , கண்ணன் ஆகியோர் தடி எடுத்துக் கொண்டு வந்து கழுதை முண்டை , தெல்லவரி முண்டை, கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். எதிரிகள் 4 பேரும் என்னை நடு மண்டையில் அடித்தார்கள் நான் மயக்கம் போட்டு விழுந்தேன். கருப்புசாமி செல்லும் போது என்னை நான் என்ன பண்ணுகிறேன் பார் என்று என்னை காலால் வயிற்றில் எட்டி உதைத்தார். எனது கணவர் கன்னிமுத்துவை 4 எதிரிகளும் தலையில் அடித்தார்கள். எனது கணவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது . எனக்கு தலையில் காயம் பட்டது . எனது மகன்கள் ,மயிலாத்தாள், காளிமுத்து ஆகியோர்கள் காரில் வந்து எங்களை உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் . எனது கணவரை அங்கு வைத்துக் கொண்டு என்னை கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் . 15 நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் . குமரலிங்கம் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பிற்கு போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.